Registered as a Newspaper

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/-

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 8 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா ஆகிர் பிறை 10 (20-02-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:81

உங்களிடம் விற்கவுள்ள
வீட்டுப் பாவனைப்
பொருள்களுக்கு
நல்ல விலை பெற்றுத்
தருபவர்கள்
விஜேபா
ரேட் சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C. முன்பாக)
T'Phone: 23665

உங்களிடம் விற்கவுள்ள
வீட்டுப் பாவனைப்
பொருள்களுக்கு
நல்ல விலை பெற்றுத்
தருபவர்கள்
விஜேபா
ரேட் சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B.M.C. முன்பாக)
T'Phone: 23665

சிறுவர் சடலங்கள் சின்னபின்னமாகின

நல்லூர், பெப் 20

தாவடி, இணுவில் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மூவரில் இருவர் சிறுவர்கள். சுமார் 8 வயது மதிக்கத்தக்க இவர்களின் சடலங்கள் சின்னபின்னமாகிக் கிடந்தன.

இந்தச் சிறுவர்களில் ஒருவர் சுமார் 20 அடி தூரம் தூக்கி வீசப்பட்டார். தோட்டத்தில் மிளகாய் பிடுங்கிக் கொண்டிருந்தபோது குண்டு விழுந்தது.

மற்றவர் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தபோது குண்டுக்குப் பலியானுர்.

இரு சடலங்களினதும் கால் பக்கம் கருகிக் காணப்பட்டது. தலைமுடியும் கருகி இருந்தது.

சிறுவர்களின் சடலங்கள் இரண்டும் யாழ். பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

யாழ் நகரில் நேற்றுப் பதற்றம்

ஷெல் வெடித்து ஒருவர் மரணம்; 2 பேர் காயம்

— க. இரத்தினராஜசிங்கம், பி. வனிதராஜன் —

நல்லூர், பெப் 20

நேற்று யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து ஆயுதப் படையினர் வெளியே வந்ததால் நகரில் பெரும் பதற்றம் நிலவியது. குண்டு வெடிப்புகளும் துப்பாக்கி வேட்டுக்களும் நகரைச் சிறிது நேரம் கலக்கின.

நேற்றைய சம்பவத்தில் ஷெல் ஒன்று சடைக்கு முன்னுல் விழுந்து வெடித்துச் சிதறியதால் ஒருவர் மரணமானுர். இருவர் காயமடைந்தனர்.

அனேகமாக தாவடிப் பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடந்துகொண்டிருந்த சமயமே கோட்டைக்குள் இருந்து இராணுவம் வெளியே வந்தது.

ஆயுதப் படையினர் சுமார் அரைமணி நேரம் யாழ் மணிக்கூண்டுக் கோபுரத்தடியில் நின்று கொண்டிருந்தனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

நேற்று மாலை 4.55 மணியளவில் யாழ் கோட்டை முகாமிலிருந்து ஆயுதப் படையினர் நடைபவனியாகவும் மூன்று கவச வாகனங்களிலும் யாழ். மணிக்கூண்டுக் கோபுரம் வரை

(4-ஆம் பக்கம் பார்க்க)

கறுப்பு ராணுவத்தால் பரந்தனில் பீதி

கிளிநொச்சி, பெப் 20

இரவோடிரவாக பரந்தன் பகுதிக்குச் சென்ற கறுப்புச் சட்டை இராணுவத்தினர் சுமார் 300 பேர் நேற்று அதிகாலை பரந்தன் பகுதி வீடுகளில் சோதனை நடத்தினர்.

இச்சோதனையின் போது பரந்தன் அரிசி ஆலை உரிமையாளர் ஒருவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இராணுவத்தினர் தேடுதல் முடிவடைந்து முகாமுக்கு திரும்புவதற்காக பரந்தன் பிரதான வீதிக்கு வந்தபோது வீதியில் வந்த வாகனங்கள் யாவும் சோதனையிடப்பட்டன.

இதனுல் சுமார் முக்கால் மணி நேரம் வாகனத் தடை ஏற்பட்டது. பஸ் பிரயாணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

★ 3 பேர் மரணம்; 14 பேர் காயம்; 9 வீடுகள் சேதம்

யுத்த விமானங்கள் குவிந்து குறிபார்த்து குண்டு வீச்சு!

தாவடியில் முற்றிலும் புதியபாணியில் தாக்குதல்

— பி. வனிதராஜன், க. இரத்தினராஜசிங்கம், —

யாழ்ப்பாணம், பெப்.20

தாவடிப் பகுதியில் நேற்று மாலை மொத்தம் ஆறு நவீன ரக யுத்த விமானங்கள் ஒரே நேரத்தில் ஒன்ருகக் குவிந்து, குறி பார்த்து குண்டு வீச்சு நடத்தின.

முற்றிலும் புதிய பாணியில் நடந்த இந்தத் தாக்குதலின்போது வீசப்பட்ட குண்டுகள், நிலத்தில் விழுந்து சுமார் 3, 4 அடிகளுக்கு பெரும் குழிகளை ஏற்படுத்தின.

விமானங்கள் கடும் புகையைக் கக்கியவண்ணம் கீழே வந்து குண்டுகளை வீசிவிட்டு, மேலெழுந்து சென்றனவாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதல்முதலாக நடத்தப்பட்ட புதிய பாணி தாக்குதலில் சுமார் ஒன்பது வீடுகள் தரைமட்டமாகின. 3 பேர் மரணமாகினர். 14 பேர் காயம் அடைந்தனர். பல வாகனங்கள் சேதமுற்றன. தோட்டங்கள் கருகி நாசமாகின.

இச் சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

நேற்று மாலை சுமார் 4 45 மணி அளவில் தாவடி, கொக்குவில், கோண்டாவில், உரும்பராய் பகுதிகளை நோக்கி வந்த ஆறு நவீன விமானங்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் அப்பகுதிகளை வானத்தில் வட்டமிட்டன.

அவை வீதியால் சென்றுகொண்டிருந்த கார்களையும், வான்களையும் துரத்தித் துரத்திச் சுட்டன. அதன் விளைவாக 15 க்கு மேற்பட்ட வாகனங்கள் சேதம் அடைந்த நிலையில் வீதிகளில் கைவிடப்பட்டுக் கிடந்தன. மக்கள் பயம் கொண்டு சிதறி ஓடினர்கள்.

வாகனங்கள் வீதிக்கு வீதி கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டன.

வட்டமிட்ட விமானங்கள் திடீரெனகரணம் அடித்தது போல, ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் குவிந்தன தாவடிப் பகுதியில் உள்ள பல வீடுகளைக் குறிபார்த்துக் குண்டுகளை வீசின.

விமானங்கள் கடும் புகையைக் கக்கிய வண்ணம் கீழ வந்து குண்டுகளை வீசி மேலெழுந்தன. மாறி மாறி இவ்வாறு குண்டு விசப்பட்டது

தாவடியும், அதனைச்

(4-ஆம் பக்கம் பார்க்க)

சேதமடைந்த வீடுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 20

விமானத் தாக்குதல்களின் போது தாவடியில் நேற்று ஒன்பது வீடுகள் முற்ருக சேதம் அடைந்தன.

சேதம் அடைந்த வீட்டு உரிமையாளர்கள் பெயர்கள் வருமாறு:-

ராஜா சிவலிங்கம் (வைத்திய அதிகாரி), சுப்பையா குமாரசாமி (விவசாயி), சுந்தரம் நவரத்தினம் (வர்த்தகர்), தம்பையா அரியரத்தினம் (பிரதேச அபிவிருத்தி அதிகாரி), சின்னத்துரை ராஜரத்தினம் (வர்த்தகர்), அப்பையா செல்வநாயகம் (வர்த்தகர்), இரத்தினம் சுந்தரலிங்கம் (வர்த்தகர்), ராஜரத்தினம் தனபாலசிங்கம் (வர்த்தகர்), சிவராஜா செல்லத்துரை (வர்த்தகர்)

உரும்பராயில்...

யாழ்ப்பாணம், பெப். 20

நேற்று உரும்பராய் மேற்கு அம்மன் கோயிலடியிலும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதனுல் இரண்டு வீடுகள் பலத்த சேதம் அடைந்தன.

தென்னை,மா,பலா மரங்கள்கருகிக்காணப்பட்டன குண்டு விழுந்த இடங்களில் பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

ஒரு குண்டு வெடிக்காது குழியில் புதைந்து கிடந்தது.

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

சேதம் அடைந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் வருமாறு:-

செல்லத்துரை வேலாயுதம் (வர்த்தகர்), வைரமுத்து சிவபாதம் (மேசன் வேலை செய்பவர்).

மனைவி செல்வராணி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் நடந்த இடத்திற்கு அண்மையில் உள்ள மக்கள் பீதியால் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்றனர்.

முச்சந்தி முரளி



கிடங்கு வெட்டியும் இனித் தப்பேலாதப்பா. தமிழ் பகுதியளில இனி வீடுகளை நிலத்துக்குக் கீழை தான் கட்ட வேணும் போலை.

★ அமெரிக்க பத்திரிகையாளர் நாடு கடத்தல்

கொழும்பு, பெப் 20

அமெரிக்க பத்திரிகையாளர் திருமதி ஜென்னட் விட்கின்சியை இலங்கை அரசாங்கம் நாடு கடத்துகிறது.

ரெலோ இயக்கத்துடன் இவர் தொடர்பு கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எட்வர்ட் கென்னடி ஆழ்ந்த கவலை

வாஷிங்டன், பெப் 19

இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் குறித்து அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணுமாறு இலங்கை ஜனுதிபதிக்கு அவர் கடிதம் எழுதி உள்ளார்.

விமான தாக்குதலில் காயமடைந்தோர்

நல்லூர், பெப் 20

நேற்று மாலை கொக்குவில், கோண்டாவில், தாவடி ஆகிய பகுதிகளில் இடம் பெற்ற விமானத் தாக்குதல்களில் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

துரைராசா ஜீவகுமார் (வயது 17) கொக்குவில். இவருக்கு கை, இடுப்பு ஆகியவற்றில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

தம்பிராசா நடராரா (வயது 50) தாவடி சுருட்டுக் கொட்டிலுக்குள் இருந்த பொழுது 'ஷெல்' விழுந்ததனுல் இவருக்கு நெஞ்சு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

எமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை - த. ஈ. இ.

சென்னை, பெப் 20

தாவடியில் தமது முகாம் விமானப் படையினரால் தாக்கப்பட்ட போதிலும், தமது தரப்பில் எவ்வித இழப்பும் இல்லை என்று தமிழ் ஈழ இராணுவம் நேற்று இங்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

பிரஸ்தாப அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நேற்று மாலை 5 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையினரால் எமது முகாம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலின் போது எமது தரப்பிற்கு எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

ஏற்கனவே செல்வநாயகம் என்பவர் எமது முகாமையும் சக தோழமை அமைப்புக்களின் முகாம்களையும் காட்டிக்கொடுத்ததற்காக தீர விசாரித்த பின் அவருக்குச் சென்ற சனிக்கிழமை மரணதண்டனை வழங்கப்பட்டது சகலரும் அறிந்ததே.

நவீன யுத்த விமானப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொட்டாஞ்சேனை, பொரளை புறக்கோட்டையில்தேடுதல்

85 தமிழர் கைது

கொழும்பு, பெப். 20

"முகமூடி" நபரின் தலையாட்டத்தைத் தொடர்ந்து கொழும்பு மாநகரில் இதுவரை 85க்கு அதிகமான தமிழ் பொதுமக்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை பொரளை, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை, கறுவாககாடு ஆகிய இடங்களில் தமிழர் வாழும் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்தினர்.

மருதானையில் ஒரு விடுதியில தங்கி இருந்த 20 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை மாவட்டத்தில்

தெஹிவத்தை கண்ணிவெடி 35 பேர் பலி!

சிங்கள மக்கள்: 31 பேர் படைச் சிப்பாய்கள்: 4 பேர்

காயமடைந்தோர் மொத்தம்: 34 பேர்

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, பெப் 20

திருகோணமலை மாவட்டத்தில் தெஹிவத்தைப் பகுதியில் இடம்பெற்ற நிலக்கண்ணிவெடி வெடித்ததில் 31 சிங்களப் பொதுமக்களும், 4 சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

5 சிப்பாய்களும் 29 சிங்களப் பொதுமக்களும் காயமடைந்தனர்

படுகாயமடைந்தவர்கள் அவசரம் அவசரமாக கொழும்பு, அனுராதபுரம் ஆகிய ஆஸ்பத்திரிகளுக்கு ஹெலிக்கொப்டர், விமானங்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

சம்பவம் இடம்பெற்ற கிராமமான தெஹிவத்தை, சேருவில தொகுதியில் உள்ளது.

இறந்தவர்களின் சடலங்கள் அனைத்தும் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு வரப்பட்டன.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தெஹிவத்தைப் பகுதியில் இருந்து கடந்தஆண்டில் வெளியேறிய சிங்கள அகதிகள் கந்தளாயில் தங்கி இருக்கின்றனர். அவர்களைப் பகுதி குதியாக மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்த அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக நூற்றுக்கு அதிகமான அகதிகளை (ஆண்கள், பெண்கள், குழந்தைகள்) ஏற்றிக்கொண்டு ஒரு பஸ்ஸும் ஒரு லொறியும் கந்தளாயில் இருந்து தெஹிவத்தை நோக்கி நேற்றுக்காலை 11 மணியளவில் புறப்பட்டன.

ஏழு வாகனங்கள் வரிசையில்

முன்னுல் மூன்று வாகனங்களில் சிப்பாய்கள் சென்று கொண்டு இருந்தனர்.

நான்காவதாக லொறி ஒன்றில் சிங்கள ஆண் அகதிகள் சென்று கொண்டிருந்தனர் இந்த அகதிகளில் ஊர்காவல படையினரும் இருந்தனராம். இவர்களுக்குப் பாதுகாப்பாக நான்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

படகு ஒன்றில் என்னை கொண்டு சென்றனர்

வில்லிஸ் கூறுகிருர்

கொழும்பு, பெப்.20

முல்லைத்தீவில் என்னைக் கைப்பற்றியவர்கள் பின்பு நீர்ப்பகுதி ஊடாக படகு ஒன்றில் கொண்டு சென்றனர்.

ஈரோஸ் இயக்கத்தினரால் விடுவிக்கப்பட்ட திருமதி வில்லிஸ் வெவிலோப் கொழும்பில் செய்தியாளர் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

எனது வயது 64, காது கேட்காது. கண்ணுடி இன்றி வாசிக்கவோ, எழுதவோ மாட்டேன்.

அப்படி இருக்கும் போது எப்படி நான் உளவு பார்க்க முடியும்?

ஆரம்பத்தில் எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

பின்னர் நன்ருக என்னைப் பார்த்தார்கள்.

இப்படி திருமதி வில்லிஸ் மேலும் சொன்னுர்

திருமதி வில்லிஸ் வெவிலோப் இன்று வியாழக்கிழமை லண்டன் பயணமாகிருர்.

சுபநேரம்

20 - 02 - 1986

வியாழக்கிழமை

சுபநேரம்:
8-02 முதல் 9-32 வரை
ராகுகாலம்;
2-02 முதல் 3-32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

'பூவே பூச்சூடவா' நதியாவின் நம்பிக்கை

பல மலையாளப் படங்களில் கிடைக்காத புகழ் ''பூவே பூச்சூடவா'' படத்தின் மூலம் கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன்

ரசிகர்களின் ஆதரவு இன்று போல் என்றும் தொடர்ந்தால் ஒரு சிறந்த நடிகையாக பரிமளிக்க முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் நதியா.

அவர் சொல்கிறார்:- டைரக்டர் பாசிலிடம் இருந்து அழைப்பு வந்தது. நான் நடித்த முதல் மலையாளப் படத்தை எடுக்கப் போவதாகவும், அதில் நான் மலையாளத்தில் செய்த வேடத்தையே தமிழிலும் செய்ய வேண்டும் என்றார்.

எனக்கு தமிழில் எழுதப் படிக்கத் தெரியாதே! என்று யோசித்தேன். டைரக்டர் பாசிலோ 'வசனத்தை மலையாளத்தில் எழுதிப் படிக்கலாம்' என உற்சாகப்படுத்தினார்.

இரண்டே மாதத்தில் கேரளாவில் 'பூவே பூச்சூடவா' படமாக்கப்பட்டது.

மலையாளத்தில் ஏற்கனவே நடித்த வேடம் என்பதால் எனக்கு எந்தவிதமான கஷ்டமும் ஏற்படவில்லை.

நடிகர் எஸ். வி. சேகர் எப்பொழுதும் ஏதாவது 'ஜோக்ஸ்' சொல்லிக் கொண்டே இருப்பார். பழகுவதற்கு மிக எளிமையானவர், மலையாளத்தில் மோகன்லால் நடித்த வேடத்தை தமிழில் இவர் நடித்தார்.

எனக்கு பிறந்தநாள் பரிசு கொடுக்கும் காட்சியில் தான் நானும் அவரும் முதன் முதலாக நடித்தோம்.

'பட்டாசு சுட்டு சுட்டு போடட்டுமா' என்ற பாடலின் போது பட்டாசு வெடித்து என் வலது கையில் அடிபடுவது போன்ற காட்சி.

காட்சியின்போது நான் சற்று அஜாக்கிரதையாக இருக்க, உண்மையிலேயே என் வலது கையில் பட்டாசு வெடித்து, தீப்புண் ஏற்பட்டது இன்னும் அந்த அடையாளம் மாறவில்லை.

பல தமிழ்ப்பட வாய்ப்புகள் தேடிவருகின்றன. ஒன்றிரண்டு படங்களில் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளேன்.

காரணம், மலையாளப்பட கால்ஷீட் திகதிகள் ஒத்துவராததால் தான் என்கிறார் நதியா

தினசரி சினிமா

இந்திய எதிர்க்கட்சிகள் அழைப்பு

புதுடில்லி, பெப். 19 விலைவாசி உயர்வை எதிர்த்து இந்தியா அடங்கலும் வேலைநிறுத்தம் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

ஜனாதிபதி தலைமை வகிக்கும் நாடாளுமன்ற கலப்புக் கூட்டத்திலும் பங்கு கொள்வதில்லை எனவும் எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எனினும் தாம் கூட்டத்தில் கலந்து கொள்ளாதது ஜனாதிபதியை அவமதிப்பது என்று பொருள்படாது எனவும் அறிவித்துள்ளனர்.

பாரத நலன் கருதியே கடின நடவடிக்கை

இளைஞர் காங்கிரஸ் சபை கூட்டத்தில் ராஜீவ்

புதுடில்லி, பெப். 19 பாரதத்தின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு கடுமையான சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

புதுடில்லியில் நடந்த காங்கிரஸ்'ஐ' இளைஞர் தேசிய சபைக் கூட்டத்தில் பிரதமர் காந்தி உரையாற்றிய பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்குதொடர்ந்து பேசுகையில்;

உற்பத்திச் செலவுகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு பாரதம் தனது உற்பத்தித் திறனைக் கூட்ட வேண்டியுள்ளது

பெற்ரோலியப் பொருள்களைப் பொறுத்தவரை 1990 ஆம் ஆண்டு இலக்கை பாரதம் எட்டியுள்ளது.

எனவே இந்த விலை அதிகரிப்பு பாதிப்புக்களை ஏற்படுத்திவிடாது.

பாரதம் பலதுறைகளிலும் முயன்று முன்னேற்றம் காணவேண்டும்.

குறிப்பாக கல்வித்துறையில்-பெரிய அளவிலான முன்னேற்றத்தை நாம் அடைந்தாகவேண்டும்.

இந்தப் பணியை இளைஞர்கள் கருத்திற் கொண்டு தீவிரமாக செயற்படுவதுடன் தமக்குத் தாமே கல்வியூட்டி வளத்தினைப் பெருக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

அமெரிக்க செனட்டுக்கும் அதிபர் றேகனுக்கும் முரண்

நிதி ஒதுக்கீட்டு விடயம் காரணம்

வாஷிங்டன், பெப், 19 நிக்கரகுவா அரசு எதிர்ப்பு கலவர அணிக்கும் மற்றும் பிலிப்பீன்ஸ் போன்ற இடங்களுக்குமாக 1600 கோடி டாலர் பணம் ஒதுக்குவது தொடர்பாக அமெரிக்க செனட்டுக்கும் ஜனாதிபதி றேகனுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

பிலிப்பீன் ஸுக்குப் பணம் வழங்கப்பட்டால் அது அங்கு தேர்தல் காலத்தில் நடைபெற்ற ஊழல் மோசடிகளுக்கு உதவுவதாகவே பொருள்படுமென செனட்டில் காரணம் கூறப்பட்டது.

எனினும் றேகன் அமெரிக்க நலன், ஜனநாயகத்தை கொம்யூனிசத்திலிருந்து காப்பாற்றுதல் என்ற அரசுக் கொள்கையைக் கூறி இந்த நாடுகளுக்கான நிதி ஒதுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் செனட் தனது நிலையில் பிடிவாதமாகவே இருப்பதாகவும் அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ்தம் செனட்டின் போக்கைக் கண்டித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பாரதத்தின் இன்ஸாட் விண்வெளிப் பயணம்

செப்டெம்பரில் நடைபெறும் என அறிவிப்பு

புதுடில்லி, பெப். 19 பாரதம் தனது இன்ஸாட் - 1 என்ற விண்வெளி ஆய்வுக் கலத்தை வருகிற செப்டெம்பர் மாதத்தில் விண்வெளிக்கு அனுப்பும்.

இதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டதாகவும் பயணத்துக்கான பரிசோதனைகளும் செய்யப்பட்டு ஆயத்த நிலையிலேயே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாரதத்தின் அதிசக்திவாய்ந்த விண்கலம் இதுவெனவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சிக்கலமான 'சலெஞ்ஜர்' விபத்துக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் பெரியதொரு முயற்சி இது எனவும் கூறப்படுகிறது.

பாரதத்துக்கு ஜப்பான் கடன்

டோக்கியோ, பெப். 19 பாரதத்துக்கு ஜப்பான் 173 கோடி ரூபா பெறுமதியான ஜென்னே கடனை வழங்கும்.

ஜப்பான் பாரத தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இந்தக்கடன் தொகை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிக்கராகுவா

கிளர்ச்சிப் படைகளுக்கு எதிரான தடை

உடன் நீக்குமாறு றேகன் காங்கிரஸிடம் கோரிக்கை

வாஷிங்டன்,பெப் 19 நிக்கரகுவா அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தும் புரட்சிப் படைகளுக்கு ஆயுத உதவி அளிக்க விதிக்கப்பட்ட தடையை விலக்கவேண்டும்

இப்படி அமெரிக்க அதிபர் திரு. றேகன் குடியரசு காங்கிரஸ் உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

நேற்று அவர்கள் மத்தியில் பேசுகையிலே திரு. றேகன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

நிக்கரகுவாவில் உள்ள சான்டினிஸ்ட் அரசுக்கு எதிராக கிளர்ச்சிப் படைகள் சண்டை இட்டு வருவது தெரிந்ததே.

இக்கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்க அரசு இராணுவ உதவி அளித்து வந்துள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்க காங்கிரஸ் இந்த இராணுவ உதவியை நிறுத்தவேண்டும். அல்லது குறைக்கவேண்டும் என்று தீர்மானம் எடுத்து இருந்தது.

உதவி அளிக்கவேண்டும் என்று மனிதாபிமான அடிப்படையில் உதவலாம் என்றும் காங்கிரஸ் கூறியிருந்தது

அந்தத் தடையை விலக்கவேண்டும் என்றே அதிபர் திரு. றேகன் இப்பொழுது வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

நிக்கரகுவா அரசுக்கு எதிரான சகல சக்திகளுக்கும் அமெரிக்க இராணுவ உதவி அளிக்கப்படவேண்டும் என்றும் திரு றேகன் சொன்னார்.

வெளி உலகில்

துருப்புகள்

பாரீஸ், பெப். 16 சாட் நாட்டு அரசுக்கு உதவியளிப்பதற்காக ஐநூறு ஆயுதப்படையினரை, பிரெஞ்சு அரசு அனுப்பிவைத்துள்ளது.

ஈரான்-ஈராக் போருக்கு நீதியான தீர்வு வேண்டும்

பிரதமர் ராஜீவ் விருப்பம்

புதுடில்லி, பெப் 20 ஈரான்-ஈராக் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பகைமை நீங்கி நியாயமானதும் உண்மையானதுமான தீர்வொன்று காணப்பட வேண்டும்.

இவ்வாறு பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி பாரதம் வந்துள்ள ஈரான் துணைவெளியுறவு அமைச்சர் மீர் ஹுசெய் மேதியுடன் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; சண்டையில் ஈடுபட்டுள்ள இருதரப்புகளும் முன்னேறியுள்ள இடங்களிலிருந்து தமது பழைய இடங்களுக்குச் செல்ல வேண்டும்.

இதனையடுத்தே போரின் தீர்வுக்கான பயனுள்ள நடவடிக்கைகளை மேற் கொள்வது சாத்தியமாகும் என்ற தெரிவித்தார்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

மக்கள் முகம்

பாடசாலை சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், பெப். 20 தம்பிராய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

விபரம் வருமாறு:

தலைவர்: அதிபர், செயலாளர்: திரு. பொ. தங்கராசா செயற்குழு: து. தர்மலிங்கம், அ. சிங்கராசா, சி. பிள்ளையினார், சோ. கனகரத்தினம், சி. கௌரிபாலன், செ. பஞ்சலிங்கம், சி. சிவதாஸன்.

நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், பெப். 20 யாழ் சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பெற்றோர் சங்கக்கூட்டம் 15. 2. 86 இல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் கே சண்முகாநந்தன், உபதலைவர்: வி. சுப்பிரமணியம், செயலாளர்: மு. ஆறுமுகம், உபசெயலாளர்: ஏ. ஸ்ரீஸ்கந்தராசா, பொருளாளர்: ச. சந்தியாப்பிள்ளை உபபொருளாளர்: எஸ் வி. சதாசிவம்.

செயற்குழு: டாக்டர் (திருமதி) வடிவாம்பிகை கைலாசபிள்ளை, டாக்டர் சி. குலசேகரம், இ. இரத்தினகோபால், திருமதி இலக்குமி பதஞ்சலி, வ. செல்லையா.

நவா மினி (உஷா மினி முன்பாக)

MISSING IN ACTION - I,II

10 30, 12 30,
2.30, 4.30,
7.00, 9 30

○ முதன் முதலாக ஒரிஜினல் பிரதியில்
○ (A) கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.
○ தடை செய்யப்பட்டது.

சேவை நலம் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப், 19 திரு. கே. நடனசபாபதியின் சேவை நலம் பாராட்டுவிழா பெப்ரவரி 24 ஆம் திகதி மாலை நடைபெற உள்ளது.

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்றத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்திற்கு டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமை வகிப்பார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த அரிமா சங்க முன்னைய உறுப்பினர்கள், ஞானசம்பந்தர் கலைமன்றம், இலங்கைச் சைவ மன்றம், யாழ் விஞ்ஞான அறிவியல் பரப்பு (கனிஷ்ட) குழு ஆகியன இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளன.

நிதி ஒதுக்கீடு

மண்டைதீவு, பெப் 20 யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உபஅலுவலகத்தின் கீழ் இயங்கும் பொது நூல் நிலையத்திற்கு இவ் வருடம் புதிய நூல்களைக் கொள்வனவு செய்ய இரண்டாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் ஆசிரியர்களுக்கு திருமலையில் பற்றுக்குறை

திருகோணமலை,பெப்20 திருகோணமலை மாவட்டத்தில் தற்சமயம் தொளாயிரம் (900) தமிழ் ஆசிரியர்களுக்கு பற்றுக்குறை நிலவுகிறது. இதே வேளை சுமார் 500 தொடக்கம் 600 வரை இடைப்பட்ட எண்ணிக்கையில் சிங்கள ஆசிரியர்களுக்கும் பற்றுக்குறை நிலவுகிறது.

விடுதலை பெறாமல் வேலைக்கு வருகை தராமலிருக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று மாவட்டக் கல்வி அதிகாரி திரு. எச். பி. விஜயசூரியா கூறினார்.

இந்த மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற வன்செயல் காரணமாக பெரும்பாலான ஆசிரியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சில இடங்களில் நிலைமை இதுவரை சீராக இல்லாததனால் பல ஆசிரியர்கள் தாம் கல்வி போதிக்கும் பாடசாலைகளுக்கு செல்ல அஞ்சுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

சிங்கள வித்தியாலயத்தில் கொள்ளை

மட்டக்களப்பு, பெப், 20 மட்டக்களப்பு சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சொந்தமான டைப்ரைட்டர்கள், டெலிவிஷன் மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதோரால் கொள்ளை இடப்பட்டன.

சிங்களவரிடம் துப்பாக்கி அபகரிப்பு

கொழும்பு, பெப், 20 அம்பாறை மாவட்டத்தில் தமண என்னும் இடத்தில் உள்ள சிங்களவர் ஒருவரின் வீட்டை இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கடந்த வியாழன் இரவு முற்றுகை இட்டது.

அந்த சிங்கள நபரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றைப் பறித்துக் கொண்டு அந்தக் கோஷ்டி சென்றதாக பொலீஸில் முறையிடப்பட்டது.

யாழ் - மட்டக்களப்பு பல்கலைக் கழகங்கள் இணைந்துகல்விகவுன்ஸில்

நேசையா அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.20 யாழ் பல்கலைக் கழகமும் மட்டக்களப்பு பல்கலைக்கழகமும் இணைந்து பிராந்திய கல்விக் கவுன்ஸில் ஒன்றை அமைக்க வேண்டும்.

கல்விமானும் பேராசிரியருமான திரு. கு. நேசையா இக்கோரிக்கையை முன்வைத்து ஓர் அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

அறிக்கையில் அவர் பின்வருமாறு விளக்கி உள்ளார்:-

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் கட்டாயமாகப் பாடசாலை செல்லும் வயதில் பெரும் எண்ணிக்கையான தமிழ் பேசும் மாணவர்கள் படிப்பு வசதிகளின்றி கஷ்டப்படுகிறார்கள்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட உயர் கல்விக்கான வசதிகளை முழுமையாகப் பெறுவதாக இல்லை இந்த நிலையிலே இவர்களின் கல்வி நிலைபற்றி முழுமையான ஆய்வு தேவை.

அரசாங்கம் அண்மையில் அமைத்துள்ள தேசிய கல்வி நிறுவனத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஒரு தமிழர்தானும் உறுப்பினராக இல்லை.

அரசாங்கம் பாராமுகமாக இருக்கும் இவ்வேளையில் தமிழ்பேசும் மாணவர்களின் கல்விநிலை பற்றி சிரத்தை எடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்விமான்களைச் சார்ந்தது.

நாம் உத்தேசித்துள்ள பிராந்திய கல்வி கவுன்ஸில் தமிழ் மக்களின் கல்வி நிலை பற்றி ஆராயவேண்டும். அவர்கள் கல்விநிலையை உயர்த்த நல்ல திட்டம் தயாரிக்க வேண்டும். தேவைப்படும் சிபார்சுகளைச் செய்யவேண்டும்.

உருவாக்கப்படும் பிராந்திய கல்விக் கவுன்ஸில் வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்விபற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றைத் தயாரித்து வெளியிடவேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் கு. நேசையா தனது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளார்.

நோயாளிகளை பார்வையிடும் நேரம் மந்திகையில் மாற்றம்

பருத்தித்துறை, பெப். 20 மந்திகை அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் டாக்டர்கள் நோயாளர்களைப் பரிசோதனையிடும் நேரம் வெள்ளி முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இம் மாற்றத்திற்கமைய தினசரி காலை 8.30 மணி முதல் 11.30 மணிவரையும், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையும் ஞாயிறு விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 11 30 மணிவரையும் வெளி நோயாளர்கள் சிகிச்சைக்காகப் பரிசோதிக்கப்படுவார்கள்.

நாட்டின் நிலைமை போக்குவரத்து வசதி கருதியே இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கட்டு துவக்கு வெடித்து சிறுவன் காயம்

கிளிநொச்சி, பெப். 20 கட்டுத் துவக்கினால் பாடசாலைச் சிறுவன் ஒருவன் காயம் அடைந்து கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

[illegible] புரத்தைச் சேர்ந்த நடராசா [illegible] எட்டு வயதுச் சிறுவனே கட்டுத் துவக்கினால் காயமடைந்தவர் ஆவார்.

கடந்த 17 ஆம் திகதி வீட்டுக்கு அருகிலுள்ள தோட்ட வளவு ஒன்றில் விறகு எடுப்பதற்காக இச் சிறுவன் சென்ற சமயம் [illegible] துவக்கு [illegible] சிறுவனின் கை முறிந்து விட்டது.

எமது புதிய வெளியீடுகள்:

✱ சிரஞ்சீவி — ராதிகா
'கொள்ளைக்காரன்'
(தரமான பிரதி)

✱ சந்திரசேகர் — நளினி
'வீட்டுக்காரி' (V.G.P. MASTER)

✱ K. பாலச்சந்தரின்
'பொம்மை' (V.G.P. MASTBR)

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
பிரபாலினி
(வேம்படி மகளிர் உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவி)

தோற்றம்:
15-10-63
மறைவு:
20-02-83

பிரபா, நிலை இல்லாத இவ் உலகம் என்று நெஞ்சில் நினைத்தாயோ. நிலையான வாழ்வைப் பெற விண் உலகம் பறந்து போனாயோ, உத்தமியே உந்தன் உயிர் கொள்ள ஓடிக் காலன் கொடிய சாரதியாய் லொறி வடிவில் நத்தி வந்த நாள் மறவோம். பாசம் என்னும் வலையிலே எம்மைச் சிக்கவைத்த பிரபாவே, வாசமுள்ள மலர் நீ; வாடாத மலர் நீ. அற்ப காலம் வாழ்ந்திந்த அவனியில் நீந்திவிட்டு, இறைவன் திருவடி இதயம் கொண்டு அவன் வாழ், கையிலையடைந்தனையோ! குடும்பத்தில் ஒளிவிளக்காய் நன்மதிப்புப் பெற்று எம்மை எல்லாம் ஆறாத்துயரத்தில் ஆழ்த்திவிட்டு மின்னலென அணைந்துவிட்ட எங்கள் செல்வமே! என்றென்றும் எம் இதயங்களில் வீற்றிருப்பாய். உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.
20-02-86.

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

உதய சங்கற்பம்

உள்ளத்தில் தெய்வீகத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களைச் சுற்றி அமைதி, சாந்தம் நிலவும்.

- சுவாமி விவேகானந்தர்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073
20-02-86
த. பெ. 23

வடக்கு, கிழக்கில் செஞ்சிலுவைப் பணிமனை

இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியத்தில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிராந்தியப் பணிமனை நிறுவப்பட வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது திருமதி பெலிலோப் வில்லியின் விடுதலை சம்பந்தமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி சன்ட்ரா சிங்கர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அன்னையர் முன்னணி தனது கோரிக்கையை அவரிடமே நேரில் கையளித்துவிட்டது.

வடக்கு, கிழக்கில் இப்போது மனித உரிமைகள் மீறப்படுகின்றன. பொதுமக்களின் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லை. அதற்கான உத்தரவாதமும் கிடையாது.

பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு, பொதுமக்கள் அழிக்கப்படுகிறார்கள். நாம் இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிடுவது போல இலங்கையில் இப்போது தமிழ் இன ஒழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. அப்பாவித் தமிழ் மக்கள் நாளாந்தம் சராசரி ஆகக் குறைந்தது ஐந்து பேராவது உயிர்ப் பலி எடுக்கப்படுகிறார்கள்.

விமானத் தாக்குதல், முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் என்று அரசாங்கப் படையினர் நாளாந்தம் வடக்கு, கிழக்கின் ஏதோ ஒரு மூலையில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். அதனால் இறந்தும் காயமுற்றும் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் எண்ணிக்கையை வரையறுத்துக் கூறமுடியவில்லை.

இவற்றின் காரணமாக தமிழ் மக்களுக்கு அவசர வைத்திய சிகிச்சைகள் இப்போது அதிகம் தேவைப்படுகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆபத்தில் சிக்கிக்கொண்டவர்களுக்குச் சகல விதத்தாலும் உதவுவதற்கு முன்னிற்பதில் சர்வதேச மதிப்பும் பெயரும் பெற்றது அந்தத் துறையில் அதன் ஆபத்பாந்தவர் செயற்திறன் எல்லோராலும் அங்கிகரிக்கப்பட்டது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் கடந்த இரண்டு மூன்று வருடங்களாகத் தொடர்ந்து ஆபத்தான வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். வாழ்க்கை எப்போது முடியுமோ என்ற நிச்சயமற்ற நிலை ஒவ்வொரு தமிழ் மகனையும் ஒவ்வொரு கணமும் பயமுறுத்தி நிற்கிறது.

எனவே அவர்களுக்கு இத்தருணத்தில் செஞ்சிலுவைச் சங்கம் செய்யவேண்டிய பணிகள் பல உள்ளன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது உயர்மட்டக்குழு ஒன்றை இங்கு அனுப்பினால், இலங்கை - வாழ் தமிழருக்கு இப்போது அது செய்யவேண்டிய உதவிகளின் தன்மை நன்கு புரியும். செஞ்சிலுவைச் சங்கப் பிராந்தியப் பணிமனை நிறுவப்பட வேண்டியதன் அவசியமும் அவசரமும் விளங்கும்.

எழுத்து மூலம் கிடைக்கும் கோரிக்கைகளை நம்பமுடியாது எனக் கருதினால், தமிழ்ப் பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேரில்வந்து நிலைமையைப் பார்க்கலாம். இங்கிருக்கும் எவருக்குமே முதலில் தெரிவிக்காமல், திடீர் எனவந்து இங்குள்ள கஷ்டங்களை நேரில் பார்த்து, தமிழ் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களையும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் நிர்ணயித்துக் கொள்ளட்டும்.

கிழக்கு மாகாணத்தில் செஞ்சிலுவைச் சங்கக் கிளை எதுவும் இல்லை. வடக்கில் யாழ்ப்பாணத்தில் பெயருக்கு ஒன்று உண்டு. அதுவும் எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் பல தடைகளைத் தாண்டி நிறுவப்பட்டது.

ஆயினும் அது உரியமுறையில் இயங்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தின் இன்றைய தேவையில் பத்து சத விதத்தையேனும் அந்தக் கிளையினால் நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகம். அதனைச் சரிவர இயக்கி, மக்களுக்கு உரியமுறையில் உதவுவதற்கு வேண்டிய நிதி, மற்றும் வசதிகள் போதிய அளவில் செய்து கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இந்தக் குறைபாடுகளைக் கண்டறிந்து வேண்டிய வசதிகளை யாழ்ப்பாணக் கிளைக்குக் கொடுப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலகம் நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் ஒருகிளையை நிறுவுவதோடு, தமிழ்ப் பகுதியில் பிராந்தியப் பணிமனை ஒன்றை நிறுவவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கொழும்புக்கும் தமிழ்ப் பகுதிகளுக்கும் இடையிலான போக்குவரத்து மற்றும் தொடர்புகள் அடிக்கடி சீர்குலைந்து வருகின்றன. ஆகையால் கொழும்புக் கிளை மூலம் தமிழ் மக்கள் உரிய உதவிகளைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவது இயல்பு. அதனைக் கருத்திற் கொண்டு பிராந்தியப் பணிமனையை நிறுவவேண்டிய கட்டாயம் உண்டாகிறது. இதனைச்சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உரிய முறையில் பரிசிலனை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

காணமற்போன தமிழர் பற்றி விசாரணை

இணைப்பு அதிகாரி பிரஜைகள் குழுவுக்கு உறுதி

மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணமற்போன தமிழர்கள் பற்றி விசாரணை செய்வதாக மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. மாக்ஸி பெரேரா உறுதியளித்து இருக்கிறார்.

கடந்த செவ்வாய்க் கிழமை மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தூது கோஷ்டி ஒன்றிடம் அவர் இந்த உறுதியை அளித்தார்

இத் தூது கோஷ்டிக்கு குழுத் தலைவர் திரு. கே. தங்கவடிவேல் தலைமை வகித்தார். உபதலைவர்: வண. பிதா சந்திரா பெர்ணண்டோ, செயலாளர் திரு சாம் தம்பிமுத்து ஆகியோரும் குழுவில் அங்கம் வகித்தனர்.

கைதாகும் தமிழ் இளைஞர் பற்றி வாராவாரம் பிரஜைகள் குழுவுக்கு அறிவிக்கவும் இணைப்பதிகாரி ஒப்புக்கொண்டார்.

மாதம் இரண்டு தரம் பிரஜைகள் குழுவைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாக இணைப்பதிகாரி கூறினர்.

இச் சந்திப்பின் போது இருதயபுரம் சம்பவம் குறித்து உபதலைவர் வண. பிதா சந்திரா பெர்ணண்டோவிடம் இணைப்பதிகாரி கேட்டறிந்தார்.

அப்பாவிப் பொதுமக்கள் தான் இச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டனர் என்று இணைப்பதிகாரியிடம் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினரால் பொதுமக்கள் கண்டபடி கைதுசெய்யப்படுகின்றனர் என்றும், இம்சிக்கப்படுகின்றனர் என்றும் தூதுக் குழு இணைப்பதிகாரியிடம் சுட்டிக்காட்டியது.

யாழ்- மண்டைதீவு தபால் சேவை ஸ்தம்பிதம்

மண்டைதீவு, பெப். 20

யாழ்- மண்டைதீவு பஸ் சேவை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் தபால் சேவை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இது தொடர்பாக வட இலங்கை போக்குவரத்துச்சபை நிறைவேற்று இயக்குநர் திரு க. சொக்கலிங்கத்துக்கு மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இருதயபுரம் தேவாலய மரணங்கள் குறித்து இணைப்பு அதிகாரி கவலை

மட்டக்களப்பு, பெப். 20

இருதயபுரம் தேவாலயத்தில் கடந்த மாதம் 3 பேர் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி திரு. மாக்ஸி பெரேரா கவலை தெரிவித்தார்.

செவ்வாயன்று அவரின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தூதுக்கோஷ்டியிடம் இக்கவலையை வெளியிட்டார்.

இத்தூதுக் குழுவுக்கு தலைவர் சட்டத்தரணி கே. தங்கவடிவேல் தலைமை வகித்தார்.

ஆமியைக்கண்டு ஓடியபோது சூடு விழுந்தது

நல்லூர், பெப். 20

ஆமியைக் கண்டு பயந்து வயலுக்குள்ளால் ஓடியபொழுது சூடு தோள்மூட்டைத் தாக்கியது.

சூட்டையும் வாங்கிக்கொண்டு தொடர்ந்து ஓடினேன். பின்னர் ஓடமுடியாமல் வயல்வெளியில் படுத்துவிட்டேன்.

கச்சாயில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது காயமடைந்த சரவணமுத்து குலேந்திரநாதன் (வயது 21) இவ்வாறு தெரிவித்தார்.

இவர் கச்சாய் கமத்துக்குச் சென்றவர் இவருடைய தோள்மூட்டில் காயம் ஏற்பட்டுள்ளது.

இவர் யாழ் - வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும் பொழுது மேற்கண்டவாறு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மலையக தமிழர்கள் விடுதலை

கொழும்பு, பெப். 20

இரண்டு சிங்களவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான 8 மலையகத் தமிழர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து லிந்துலப் பகுதியில் 10,000 தோட்டத் தொழிலாளர் மேற்கொண்டு இருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

பம்பரகலைத் தோட்டத்தைச் சேர்ந்த 8பேரே கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதானவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, பெப். 20

கடந்த சனிக்கிழமை ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர், ஏறுவூர்ப் பகுதியில் ஐயங்கேணி என்னுமிடத்தில் குழி ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

திங்கள் மாலை இவரது சடலம் மீட்கப்பட்டது.

முதலித்தம்பி சோமசுந்தரம் என்பது அவரது பெயர். 2 பிள்ளைகளின் தந்தை.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மீண்டும் தொழிற்சங்கமாகபதிவு

யாழ்ப்பாணம், பெப். 20

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மீண்டும் தொழிற் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் புதிய தலைவராக ஆரைப்பற்றை இராமகிருஷ்ண மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. க. சோமசுந்தரம் பணியாற்றுவார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட சங்கதின் யாப்பினை மையமாகவும், அதே நிர்வாகிகளைப் புதிய நிர்வாகிகளாகவும் பழைய உறுப்பினர்கள் புதிய உறுப்பினர்களாகவும், பழைய சங்கத்தின் அலுவலகம், சொத்துக்கள் புதிய சங்கத்தின் அலுவலகமாகவும், சொத்துக்களாகவும் கொண்டு சங்கம் இயங்குமெனவும் பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இரத்துச் செய்யப்பட்ட பின்னணி, அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான அறிக்கையொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் சங்கத்தின் ஆட்சிக்குழுக் கூட்டத்திற் சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் தீயணைக்கும் பிரிவு

ஆரம்ப விழா மார்ச் 12 இல்

நல்லூர், பெப். 20

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு கனேடிய அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட தீயணைக்கும் இயந்திரம் மார்ச் மாதம் 12 ஆம் திகதி வைபவ ரீதியாக செயற்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ் - மாநகர சபை ஆணையாளர் திரு. சி வி கே. சிவஞானம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையிலுள்ள கனேடிய தூதுவர் திரு. டி. எம். கொலகொட் திட்டமிட்டபடி தீயணைக்கும் படைப்பிரிவை மார்ச் மாதம் 12 ஆம் திகதி நல்லூரில் உள்ள இப் பிரிவில் ஆரம்பித்து வைப்பார்.

அன்றைய தினத்தில் இருந்து தீயணைக்கும் படை யாழ் மாநகரசபை எல்லைக்குள்ளும் வெளிக் கிராமங்களுக்கும் சென்று சேவையில் ஈடுபடும்.

சிரமதானம் மூலம் வீதி செப்பனிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப் 20

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட கௌதாரிமுனை-கல்முனை மண்வீதி சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டது.

கௌதாரிமுனை இணக்க சபை, சனசமூக நிலையம் வெட்டுக்காடு, விஞசியோடை பண்ணித்தலை போன்ற கிராமப் பொது மக்களின் ஒத்துழைப்பால் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

சம்பூரில் சிறுவன் கைது

திருகோணமலை, பெப், 20

வயலில் வேலை செய்து கொண்டு இருந்த 15 வயது தமிழ்ச் சிறுவனை பாதுகாப்புப் படையினர் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்தனர்.

சிறுவனின் பெயர் நல்லையா மாணிக்கராசா.

சம்பூரில் இச்சம்பவம் நடந்தது.

களவாடிய கோப்ரல்

இராணுவ சார்ஜண்டின் மோதிரத்தை, கோப்பரல் களவாடினராம்.

கொழும்பு முகத்துவாரத்துக்கு அருகில் உள்ள காக்கைதீவு ஆயுதப் படை முகாமில் இச்சம்பவம் நடந்தது.

இது சம்பந்தமாக இராணுவக் கோப்பரல் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

தேடுதல் மன்னர் டிப்போ பகுதியில்

யாழ்ப்பாணம், பெப். 20

செவ்வாயன்று மன்னார் நகரிலும் பஸ் டிப்போ பகுதியிலும் சிருடையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தேடுதல் நடவடிக்கையின்போது மன்னர் டிப்போவைச் சேர்ந்த நான்கு ஊழியர்களை அவர்கள் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

நால்வரும் விசாரணைக்குட்படுத்திய பின் எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் இருவர் பஸ் நடத்துநர் என்றும் ஒருவர் பொறியியலாளர் என்றும் மற்றவர் டிப்போ இன்ஸ்பெக்டர் என்றும் தெரியவருகிறது.

கடத்தல் பொருள்கள் அகப்பட்டன

நல்லூர், பெப். 20

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் லொறி ஒன்றினை அனுராதபுரத்தில் மறித்து சோதனை நடத்திய பொலீஸார் 300 இந்தியன் சேலைகளையும், 100 இந்தியச் சாறங்களையும் கைப்பற்றினர்.

இது பற்றி லொறிச் சொந்தக்காரர்களிடம் வினவியபோது யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் புடைவை நிறுவனம் ஒன்றின் ரசீதினை அவர்கள் காட்டினராம்.

ரசீதில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள புடைவை நிறுவனத்துடன் பொலீஸார் தொடர்பு கொண்ட பொழுது அது போலி ரசீது என கண்டு பிடிக்கப்பட்டதாம்.

பொய்யாமொழி

குறள்:

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள்:

வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

ஆங்கில பரீட்சைக்கு ஆயிரம் பேர் தோற்றினர்

யாழ்ப்பாணம், பெப். 20

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஆங்கில தேசிய சான்றிதழ் பரீட்சைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து ஆயிரத்துக்கு அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றினர்கள்.

யாழ் இந்துக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, யாழ். ஆங்கில கன்னியர் திருக்குடும்பமடம், யாழ். தமிழ் கன்னியர் மடம் ஆகிய நான்கு பாடசாலைகளில் எட்டு தேர்வு நிலையங்களில் இப்பரீட்சை நடத்தப் [illegible] பணிப்பாளர் திரு. எம். [illegible] னுக்குத் தெரிவித்தார்.

அகதிகளுக்குதவிய மாவட்டம் இன்று அகதி நிலையில்

இளிநொச்சி பற்றி ஒரு கண்ணோட்டம்

—கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர்—

கிளிநொச்சி, பெப். 20

கிளிநொச்சி மாவட்ட மக்கள் இன்று எப்படி வாழ்கின்றனர்?

கசப்பான, மனதைப் பிழிய வைத்த சம்பவங்களினுல் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலை இன்னும் சீராகவில்லை.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம் தருமபுரம், கனகபுரம், கணேசபுரம், இரத்தினபுரம், பரவிப்பாஞ்சான், திருவையாறு, திருநகர் ஆகிய இடங்களில் வாழும் மக்கள் இன்னும் பதற்றத்தின் மத்தியில் தான் வாழ்கின்றனர்.

கிளிநொச்சி, பரந்தன், பூநகரி, [illegible] ஆகிய இடங்களில் [illegible] கிறது.

எல்லா நிர்வாகங்களும் சீரற்ற நிலையில் காணப்படுகின்றன.

சுகாதாரம்

தாக்குதல்களால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது ஆனல் கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் வைத்திய வசதிகளோ குறைந்து வருகின்றன.

உயிரற்ற சடலம் போன்று ஆஸ்பத்திரி உள்ளது.

போதிய டாக்டர்கள் இல்லை. மருந்துகள் இல்லை அபாயகரமான நிலைக்குள்ளான நோயாளர்களை மாலை 6 மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு செல்ல ஆனையிறவில் அனுமதி பெற வேண்டும்.

சடலங்களை பாதுகாப்பாக வைத்து இருக்க வசதியும் இடையாது. பிரேத பரிசோதனைக்குக் கூட வேறு இடத்தில் இருந்துதான் டாக்டர்கள் வரவேண்டியுள்ளது.

அபிவிருத்தி

மாவட்டத்தில் அபிவிருத்திவேலைகள் தடைப்பட்டுள்ளன. வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட வீதிகள் எல்லாம் அப்படியே கிடக்கின்றன.

கேட்பார் இல்லை. சீரான போக்குவரத்து இல்லை. இதனுல் உணவுப் பொருள்கள் விலை அதிகம்.

விவசாயம்

விவசாய நடவடிக்கைகள் ஸ்தம்பித நிலைமைக்கு வந்துள்ளன. நிம்மதியாக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டு உள்ளவர்.

செய்கை பண்ணப்பட்ட நெற்பயிரையே நிம்மதியாக அறுவடை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நெற்பயிர்களும் சேதமாக்கப்படுகின்றன.

பொதுமக்கள் நடமாட்டம்

கிளிநொச்சி ரயில் நிலையப் பயங்கரத்தின் பின்னர், மக்கள் அரச அலுவலகங்களிலும் நடமாடப் பயப்படுகின்றனர்.

என்ன, ஏது எப்பொழுது நடக்குமோ என்று தெரியாத நிலையில் அக்கம் பக்கம் பார்த்து அலுவல்களை முடிக்கின்றனர்.

அகதிநிலை

மலையகம் மற்றும் பல பகுதிகளில் இருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு அடைக்கல பூமியாக விளங்கியது கிளிநொச்சி மாவட்டம்.

இங்கு இன்று நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களினுல் மாவட்டத்தின் நிரந்தரக் குடியிருப்பாளர்களே அகதிகளாக வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அகதிகளுக்கு உதவிய இம்மாவட்டம், இன்று 'அகதி' நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது.

ரெலிபோன் பேச
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

உதயன்
20 02 1986

ரெலிபோன் வாங்க
☎
ரெலிகுளோப்
இரவு பகல் 24 மணி சேவை
ரெலி: 25088 (6 தொடர்புகள்)

இனப்பிரச்சினை:

இலங்கை நிலையை எழுத்தில் பெறுவதில் இந்தியா அக்கறை

புதுடில்லி, பெப். 19 இலங்கைத் தூதுவர், வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து கொடுத்து வரும் விளக்கங்களை எழுத்துமூலம் பெறுவதில் இந்திய வட்டாரங்கள் அக்கறை காட்டுகின்றன.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் முட்டுக்கட்டையாக இருக்கும் அம்சங்களில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இலங்கை தரப்பில் இருந்து இன்னும் வரவில்லை

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது

திரு ஜி கே ரெட்டி எழுதியுள்ள அச்செய்திக் கட்டுரை வருமாறு:-

திரு. பண்டாரி இலங்கை செல்வதற்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், விடுதலைப் போராளிகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திக்க இருக்கின்றார்.

இச்சந்திப்பு சென்னையில் அல்லது புதுடில்லியில் இடம்பெறும்.

இலங்கை அரசு இது வரை புதிய யோசனைகள் எதையும் முன்வைக்கவில்லை.

இலங்கைத் தூதுவர் திரு. பண்டாரியை சந்தித்து கூட்டணியின் யோசனைகள் குறித்த இலங்கையின் புதிய நிலைமை பற்றி விளக்கம் கூறிவருகிறார்.

இந்த வாய்மூலமான விளக்கங்களை எழுத்து மூலம் பெறுவதில் திரு. பண்டாரி அக்கறை காட்டிவருகிறார்.

இலங்கையின் விளக்கங்களை இந்தியா எழுத்து மூலம் பெறுவதற்கான காரணம், அந்த நிலையில் இருந்து பின்னோக்கிச் செல்லாமல் இருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே.

பூநகரி இராணுவ முகாம் அருகே துப்பாக்கிச் சூடு

மரண வீட்டுக்குச் சென்ற மீசாலைவாசிக்கு ஏற்பட்ட அனுபவம்

நல்லூர், பெப். 20 நேற்று முன்தினம் பூநகரி இராணுவ முகாமருகே துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான சாவகச்சேரி ப. நோ. கூட்டுறவுச் சங்க ஊழியர் ஒருவர் யாழ்ப்பாண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

மீசாலை வடக்கைச் சேர்ந்த குமாரவேலு சின்னையா (வயது 48) என்பவரே காயமடைந்தவராவார்

இவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இவர் தனக்கு நடந்த சம்பவம் பற்றி யாழ். வைத்திய சாலையில் வைத்து சொன்னதாவது:

நேற்று முன்தினம் அக்காய் என்ற இடத்தில் பாம்பு கடித்து மரணமானவரின் வீட்டுக்கு சென்றுவிட்டு இரவு ஏழு மணியளவில் சாவகச்சேரிக்கு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது பூநகரி இராணுவ முகாமருகே வந்த பொழுது அடோ! அடோ!! எனச் சத்தம் கேட்டது.

நான் சைக்கிளைத் திருப்பி வந்த வழியே செல்ல முனைந்தேன்.

அப்பொழுது வீதிகளில் திடீரென வெளிச்சங்கள் தோன்றின

என்னை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது

எனது காலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது.

பின்னர் ஒருவாறு மறைந்து மறைந்து அருகே இருந்த வாடி வீட்டுக்குச் சென்று மருந்து கட்டிக் கொண்டேன்.

இரவு எட்டரை மணியளவில் வேறு இளைஞர்கள் என்னை சாவகச்சேரி வீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தனர்.

புதன்கிழமைதான் யாழ் வைத்தியசாலைக்கு வந்தேன்.

இப்படி அவர் சொன்னார்.

யாழ். நகரில்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறி வந்தனர்.

சில ஆயுதப்படையினர் சுப்பிரமணியம் பூங்காவூடாகவும் நூலக வளவூடாகவும் தவழ்ந்து தவழ்ந்து மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு வந்தனர் என்று கூறப்படுகிறது

ஆயுதப்படையினரின் வருகை அறிந்த போராளிகள் குண்டுகளை வெடிக்க வைத்தனர்,

ஆயுதப்படையினரும் பதிலுக்கு பிரதான வீதி, மணிக்கூண்டு வீதி, கே. கே எஸ் வீதி பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகங்களையும் "ஷெல்" தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இதனால் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்

பிரதான வீதியில் உள்ள கடை ஒன்று சேதமடைந்தது.

போராளிகளின் தாக்குதலை அடுத்து ஆயுதப் படையினர் முகாமுக்குத் திரும்பினர்.

மரணமானவர் எம். பத்மநாதன் (வயது 25). இவர் கண்டியைச் சேர்ந்தவர் யாழ்ப்பாணத்தில் பேக்கரி ஒன்றில் கடமை புரிந்து வந்தார். ஷெல் ஒன்று கடைக்கு முன்னே விழுந்ததால் அது வெடித்துச் சிதறி பத்மநாதனை பலி எடுத்தது.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

ஆர். ராமு (28 வயது) இவர் திருமணம் முடித்து மூன்று மாதங்களே ஆகின்றன. இவருக்குத் தொண்டைக் குழியில் காயம் ஏற்பட்டுள்ளது. அவசர சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

நடராசா செல்வன் (வயது 18) இவருக்குக் காலில் காயம் ஏற்பட்டது.

தமிழ் ஈழ ராணுவ குண்டுவெடிப்புமுயற்சி

முறியடிப்பு என்கிறார் லலித்

கொழும்பு, பெப். 20 காரில் 'குண்டுகள்' வைத்து கொழும்பு மாநகரில் தாக்குதல்களை மேற்கொள்ள தமிழ்ஈழ ராணுவம் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாம்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

மருதானை பாலம், மாளிகாவத்தையிலுள்ள அரசாங்க செயலகம், சிலிங்கோ கட்டடம் ஆகியவற்றை கார்க் குண்டுகள் வைத்துத் தகர்க்க தமிழ் ஈழ ராணுவம் திட்டமிட்டு இருந்ததாம்.

அளவ்வை பாலத்தில் வெடிகுண்டுகளுடன் லொறி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது

இச்சம்பவங்கள் தொடர்பாக தமிழ்ஈழ ராணுவத்தைச் சேர்ந்த ஜெயசீலன் என்பவர் தேடப்படுகிறார்.

இப்படி அமைச்சர் அத்துலத் முதலி கூறினார்.

கறுப்பு...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

பட்டனர்

இதன் பின்னர் தனியார் வீடு ஒன்றில் இருந்த ஈ. எல் எப் டிரக் ஒன்றை இராணுவத்தினர் கைப்பற்றி அதன்மூலம் முகாம் திரும்ப முற்பட்டனர் ரயில் பாதை மீது அதனை ஏற்றியபோது இரண்டு ரயர்களும் வெடித்தன.

இதன் பின்னர் கண்டி வீதியால் வந்த சகல வாகனங்களும் மறிக்கப்பட்டு ஒன்பது லொறிகள் மூலம் இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர்.

இவ் வாகனங்கள் முகாம் செல்லும் வரை கிளிநொச்சியிலிருந்து ஆனையிறவு வரை பெரும் பதற்றம் நிலவியது.

2 சிப்பாய்கள் ஆஸ்பத்திரியில் மரணம்

கொழும்பு, பெப். 20 இரண்டு சிப்பாய்கள் கொழும்பு ஆஸ்பத்திரியில் நேற்று மரணமானார்கள். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த சிப்பாய் நேற்று மரணமானார்.

இவர் காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டலில் உள்ள ஆயுதமுகாமைச் சேர்ந்தவர் துப்பாக்கியைக் கழற்றிப் பார்க்கும் சமயம் ஏற்பட்ட வெடியினால் காயமடைந்தார்.

மரணமான மற்ற சிப்பாய் நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

எமது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்டு எம்மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலின்போது, அயலில் உள்ள வீடுகளுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட இழப்புகளுக்கும் அசௌகரியங்களுக்கும் தமிழ் ஈழ இராணுவம் தனது துயரம் நிறைந்த கவலையைத் தெரிவித்துக்கொள்ளுகிறது- என்று கூறப்பட்டுள்ளது

கொட்டாஞ்..

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அளவ்வையில் வைத்து லொறி ஒன்றைப் பாதுகாப்புப் படையினர் தடுத்துச் சோதனை இட்டபோது, சுருட்டுப் பெட்டி ஒன்றுக்குள் வெடிகுண்டுகள் இருந்ததாகக் கூறப்பட்டது.

அது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவர் தான் முகமூடி அணிந்தவர் என்று பேசப்படுகின்றது.

அச்சுருட்டுப் பெட்டி கொழும்பு 4ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு விலாசமிடப்பட்டு இருந்தது

வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து அந்த வர்த்தக நிறுவனம் சீல் வைக்கப்பட்டது. நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த ஒன்பது தமிழர்களும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரும் வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்படுகின்றன

கொழும்பு மாநகரின் முக்கிய பாலங்களுக்கு காவல் போடப்பட்டுள்ளது

யுத்த விமானங்கள்....

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

சூழ உள்ள பகுதிகளும் கதிகலங்கின.

நேற்று வீசப்பட்ட குண்டுகள் நேபாம் குண்டுகளாக இருக்குமோ எனச் சந்தேகப்படும் அளவுக்கு அவை விழுந்த இடங்கள் கிடங்குகளாக உள்ளன. பார்க்கப் பெரும் பயங்கரம்.

அதனால் அப்பகுதியில் 9 வீடுகள் தரைமட்டமாகின அரிசி ஆலைகள் நெசவு ஆலைகள் போன்றவையும் இக் குண்டு வீச்சிலிருந்து தப்பவில்லை

குண்டு வீச்சினால் வீடுகள், வளவுகளில் மூன்று அடி ஆழமான கிடங்குகள் காணப்படுகின்றன.

பனை மரங்கள், தென்னை மரங்கள், குண்டுகள் பட்டு முறிந்து சரிந்து காணப்படுகின்றன.

இக் குண்டுகள் யாவும் [illegible] விமானத்தில் இருந்து விழுந்து இடையில் வெடித்துச் சிதறின.

சில குண்டுகள் நேராக தரையை நோக்கிச் சென்று வெடித்தன.

குண்டு வீச்சு நடந்த போது, மக்கள் செய்வதறியாது, எங்கு போய் ஒதுங்கித் தப்பித்துக் கொள்வது எனத் தெரியாது பதற்றம் அடைந்தனர். பலர் சிமெந்துக் கூரை உள்ள வீடுகளை நாடி ஓடினர்.

சுமார் அரைமணி நேரம் தாக்குதல்கள் நீடித்தன. இரண்டு சிறுவர்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

பதிநாலுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் மேலும் பலர் காயமுற்றிருக்கலாம் என அஞ்சப்பட்டது.

இதனால் இப்பகுதிகளில் உள்ள மக்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இப் பகுதியிலுள்ள [illegible] வைர[illegible] ஒன்றும் குண்டு வீச்சினால் சேதமடைந்தது.

அரசின் 57 பக்கப் பதில்:

கூட்டணியின் யோசனைகளை ஏற்றால் தமிழீழத்தைத் தவிர மற்றவற்றைக் கொடுத்ததாக முடியும்

சென்னை, பெப் 19 தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளை ஏற்றால், தமிழ் ஈழத்தைத் தவிர ஏனையவற்றைக் கொடுத்ததாக முடியும்

இலங்கை அரசின் 57 பக்கப் பதிலில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

கூட்டணியின் மாற்று யோசனைகள் தமிழ் ஈழ இராஜ்யம் ஒன்றை அமைப்பதற்கான முதற்கட்டமாக அமைந்துள்ளன.

வடக்கு, கிழக்கு மட்டும் அல்ல, வடமத்திய, மலையகத்தை இணைத்து தமிழ் ஈழம் அமைக்கும் முயற்சியையே கூட்டணியின் மாற்றுயோசனைகள் பிரதிபலிக்கின்றன.

கூட்டணியின் யோசனைகள் இலங்கைக்குப் பாதகமான அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளது. இந்தியத் தரப்பில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தக் கூடியதாக இந்த யோசனைகள் அமைந்துள்ளன இந்தியாவின் பொது அபிப்பிராயத்தை மாற்றும் முயற்சியிலும் இதன் மூலம் கூட்டணி ஈடுபட்டுள்ளது.

இலங்கையின் 57 பக்கப் பதிலில் மேற்கண்ட தகவல்கள் அடங்கியுள்ளதாக 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுங்கள்

சி. சுப்பிரமணியம் உட்பட எழுவர் ராஜீவிடம் கோரிக்கை

சென்னை, பெப். 19 இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நல்லதோர் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

முன்னாள் நிதி அமைச்சர் திரு சி சுப்பிரமணியம் உட்பட 7 பேர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் மேற்கண்டவாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த ஏழு பேரில் இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்னை ஆசிரியர் திரு. ராஜ்மோகன் காந்தி, முன்னாள் சுப்பிரிம் கோட் நீதிபதி திரு ரி எஸ் கைலாசம் ஆகியோரும் அடங்குவர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குச் சமஷ்டி முறையிலான தீர்வு காண்பதற்கான அவகாசம் இன்னும் இருந்து வருகிறது.

பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முயல்வது இலங்கையில் பொருளாதாரப் பாதிப்பையும் தீராத மனக்கசப்பையும் ஏற்படுத்தும்.

தமிழர் இரண்டாம் தரப் பிரஜைகளாக கருதப்படுவது வருந்தத்தக்கது.

மேற்கண்டவாறு இவர்களின் கூட்டு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவத்தை கண்ணி-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்களும் லொறியில் இருந்தனர்

ஐந்தாவதாக சென்ற பஸ்ஸில் சிங்களப் பெண் அகதிகளும் குழந்தைகளும் இருந்தனர். இவர்களுக்கு பாதுகாப்பாக சில சிப்பாய்களும் பஸ்ஸில் இருந்தனர்.

பஸ்ஸிற்கு பின்னால் 2 வாகனங்களில் சிப்பாய்கள் சென்றனர்

சித்தாறு என்னும் இடத்தில் நிலக்கண்ணி வெடித்தபோது நான்காவதாகச் சென்ற லொறி தான் சிக்கிக் கொண்டது.

லொறியில் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர்; காயமும் அடைந்தனர்.

லொறிக்கு முன்னாலும் பின்னாலும் சென்ற வாகனங்கள் தப்பி விட்டன.

நேற்று மாலை 6 மணி வரை 36 சடலங்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.சி.சே. செல்லத்துரை பிரேத பரிசோதனைகளை நடத்தினார்.

திருமலை பதில் நீதிவான் திரு. எம் கே செல்வராசா, மூதூர் நீதிவான் திரு.எஸ் கதிரவேற்பிள்ளை ஆகியோர் முன்னிலையில் பிரேத பரிசோதனைகள் மாறி மாறி நடத்தப்பட்டன.

சாட்சியங்கள் பதிவு செய்வது பின்போடப்பட்டது.

நகரில் பதற்றம்

தெஹிவத்தைக் கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து, திருமலை நகர் சுற்றுப்புறப் பகுதிகளில் நேற்றுப் பதற்றம் நிலவியது.

சன நடமாட்டம் நண்பகலின் பின்னர் குறைந்துவிட்டது.

தமிழருக்குச் சொந்தமான கடைகள் வேளைக்கே மூடப்பட்டு விட்டன.

விமான..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கை ஆகியவற்றில் காயங்கள் ஏற்பட்டுள்ளன,

இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.

எஸ். சின்னக்கிளி (வயது 28) கோண்டாவில்.

க இராசதுரை (வயது 60) இணுவில் இவருக்கு நாடியில் காயம் ஏற்பட்டது.

சிவபாதம் செல்வராணி (30 வயது) உரும்பராய்.

குலேந்திரன் புஸ்பராணி (வயது 35) கோண்டாவில். இவரது இரண்டு கால்களையும் குண்டு துளைத்தது. இவருக்கு 2 பிள்ளைகள் உள்ளனர்.

ஆர். கணபதிப்பிள்ளை (வயது 55) பண்டத்தரிப்பு இவருக்கு கையில் காயம் ஏற்பட்டது.

ஆர். சின்னையா (45 வயது) கொடிகாமம்.

கதிரவேலு விஜயானந்தன் (50 வயது) பண்டத்தரிப்பு.

அ. குணரத்தினம் (31 வயது) உரும்பராய்.

ஹெலிக்கொப்டர் தாழப் பறந்தபோது

வாழைகள் முறிந்தன

காங்கேசன்துறை, பெப் 20 ஹெலிக்கொப்டர் ஒன்று மிகவும் தாழ்வாகப் பறந்து விவசாயிகளின் வாழை மரங்களையும் விவசாயப் பயிர்களையும் சேதமாக்கியது

செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது.

பலாலியை அடுத்துள்ள தையிட்டி கிராமத்தில் ஹெலிக்கொப்டர் மிகவும் தாழ்வாகப் பறந்து நோட்டம் விட்ட போது அதன் வேகத்தில் ஏராளமான வாழைகள் முறிந்து சேதமடைந்தன. பயிர்களும் சேதமுற்றன

அப்போது அக்கிராம விவசாயிகள் தோட்டங்களில் நீர் இறைத்துக் கொண்டிருந்தனர். தாழ்வாகப் பறந்த ஹெலிக்கொப்டரிலிருந்து குறி பார்க்கப்பட்டதாகவும் அவர்கள் அச்சத்தினால் ஓடி ஒளிந்ததாகவும் கூறப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, செவ்வாய் பிற்பகல் காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டலில் இருந்து பலாலி இராணுவ முகாமுக்கு இராணுவத்தினர் நடை பவனியாகச் சென்றனர்.

நான்கு எரிபொருள் பவுசர்களுடன் கவச வாகனங்களும் 500 க்கு மேற்பட்ட இராணுவத்தினரும் காங்கேசன்துறையிலிருந்து மயிலிட்டி ஊடாக பலாலி சென்றனர். அச் சமயம் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப்பறந்து பாதுகாப்பு அளித்தது

அவர்கள் பலாலி சென்றடைந்த பின் பலாலி முகாமைச் சுற்றி ஹெலிக்கொப்டர் ஒன்று பல மணி நேரமாக வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுகளையும் தீர்த்தது.

இதனால் இப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பாடசாலைகள் பழைய இடங்களுக்கு இடம் மாற்றம்

பருத்தித்துறை, பெப் 20 பருத்தித்துறை நகரின் கடற்கரைப் பகுதியான முனையிலுள்ள கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், புனித தோமையர் மகளிர் வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளும் மீண்டும் அதே இடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன.

கடந்த 5 ஆம் திகதி பருத்தித்துறை நகரில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கும், புனித தோமையர் மகளிர் வித்தியாலயம் தும்பளை லூர்து மாதா கோயில் மண்டபத்திற்கும் இடம் மாற்றம் செய்யப்பட்டிருந்தன.

தற்போது இவ்விரு பாடசாலைகளும் பழைய இடங்களிலேயே செயல்பட்டு வருகின்றன.

செய்திச் சாரம்

4 சிப்பாய்கள் காயமடைந்தனர்

மட்டக்களப்பு, பெப். 20 பொத்துவில் - மொனராகலை வீதியில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடியில் 4 இராணுவ சிப்பாய்கள் காயம் அடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடந்தது.

காயமடைந்த அனைவரும் பதுளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர்.

லபுக்கலைக்கு உணவுப் பொருள்களை வாங்கச் செல்கையிலேயே சிப்பாய்கள் சென்ற ஜீப் தரைக் கண்ணிவெடியில் சிக்கியது.

மன்னாரில் மேலும் 9 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 20 மன்னாரில் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட 40 பேரில் மேலும் 9 பேர் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டார்கள்.

7 பேர் பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

மாதகல் இளைஞன் கரை சேரவில்லை

பண்டத்தரிப்பு, பெப். 20 மீன் பிடிக்கச் சென்ற மாதகல் இளைஞனுக்கு நடந்தது என்ன?

செவ்வாய்க்கிழமை இரவு கடற்றொழிலுக்குச் சென்ற கவிராசன் என்ற இந்த வாலிபர் கரை திரும்பவில்லை. ஆனால் இவரின் கட்டுமரம் மட்டும் கரை சேர்ந்தது.

இருதயபுர சம்பவ நினைவஞ்சலி

மட்டக்களப்பு, பெப். 20 மட்டக்களப்பு, இருதயபுரம் படுகொலை நடந்த ஒரு மாத நினைவஞ்சலி நேற்று அனுட்டிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது 24 பேர் மரணமானார்கள் என்பது தெரிந்ததே

லொறி கடத்தல்

மட்டக்களப்பு, பெப். 20 மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் நேற்று அரிசியுடன் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று கடத்தப்பட்டது. 60 மூடை அரிசி இந்த லொறியில் இருந்தது.

ஒட்டுசுட்டானில் மூவர் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 20 ஒட்டுசுட்டானில் நேற்று நடந்த சம்பவம் ஒன்றில் சிப்பாய்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டனர். இதில் ஒருவர் பெண்.

சிப்பாய்களிலும் இருவர் காயம் அடைந்தனர்.

சிப்பாய்கள் மீது கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், பெப் 20 பூநகரியில் ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது இரு கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் 5 சிப்பாய்கள் காயம் அடைந்தனர்.

தென் ஆபிரிக்காவில் கலவரம்

ஜோஹன்னஸ்பேர்க், பெப் 19 தென் ஆபிரிக்காவில் கடந்த 5 தினங்களாக தொடர்ந்து கலவரங்கள் நடைபெற்று வருகின்றன.

அலெக்ஸான்டிரியா நகருக்குள் திருமதி வின்னி மண்டெலாவின் பத்திரிகையாளர் மாநாடு தடை செய்யப்பட்டதை அடுத்தே இந்தக் கலவரங்கள் மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீட்டு திகதி 20 2 1986